அல்லலுறும்
அகதி மாணவர்களுக்கு
பிரத்தியேக சலுகையுடன்
Aug 90 A/L
கலை, வர்த்தக, விஞ்ஞான
வகுப்புகள் யாவும் வழமை
போல் நடைபெறுகின்றன.
நாவலர்
சித்தன்கேணி.

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 2-50

முரசொலி

முரசு 04 ஒலி 146 திங்கள் 09-07-1990 (ஆனி 25) துல்ஹஜ் 15

அல்லலுறும்
அகதி மாணவர்களுக்கு
விசேட சலுகையுடன்
G. C. E O/L Dec
வகுப்புகள் யாவும்
வழமைபோல்
நடைபெறுகின்றன.
நாவலர்
சித்தன்கேணி.

★ ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று நிபந்தனை அறிவிப்பு
சர்வதேச சமூக சம்மதத்துடன் மட்டுமே

# புலிகளுடன் பேச்சுக்கள்

# இனி சாத்தியமாகும்

"சர்வதேச சமூகத்தின் சம்மதத்துடன், அவர்களின் பங்களிப்புடன் மாத்திரமே இனிமேல் நாம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும்" சர்வதேச சமூக அங்கீகாரம் நமக்கு ஏற்புடையதாகவும் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ நேற்று அறிவித்தார்.

புத்தளம் நகரமண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர்கள், அதிகாரிகள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் நேற்று உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு சொன்னார்.

"எம் நாட்டில் ஏற்பட்டுள்ள இப்பிரச்சினையைத் தீர்க்க சர்வதேச சமூகத்தின் சம்மதம், பங்களிப்பு அவசியமாகிறது. அவர்களுடன் பேசிய பின்பே இப்பிரச்சினைக்கான தக்க தீர்வை அரசு உருவாக்கும்" என்று அவர் சொன்னார்.

### புலிகள் நிறுத்தினால் மட்டுமே ..

"விடுதலைப் புலிகள் தமது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டால் மாத்திரமே வடக்கு, கிழக்கில்

— 4 ஆம் பக்கம் பார்க்க

யாழ் குடா நாட்டைத் தாக்க ஸ்ரீலங்கா முப்படைகளும் தயாராகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலிட உத்தரவுக்காக அவை காத்துள்ளன. செய்தி விபரம் உள்ளே.

## வனப் பகுதிகளில் தமிழர் கோரக் கொலை

பட்டித்திடல் பள்ளிக்குடியிருப்பு, சேனையூர், கட்டைபறிச்சான், மூதூர் ஆகிய பகுதி மக்கள் பெரும்ளவில் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

இதே வேளை கடந்த வியாழனன்றும் வெள்ளியன்றும் கட்டைபறிச்சான் தோப்பூர் ஆகிய இடங்களில் உள்ள காட்டுப் பகுதிகளில் இருந்த தமிழ் மக்கள் சிலர் அரச படைகளால் வெட்டிக் கொல்லப்பட்டதாக தெரியவருகிறது. (9- ஸ்ரீ)

★ கிழக்கு சென்ற ஏ. எவ். பி. செய்தியாளர் தகவல்
சைக்கிள்களில் சுதந்திர சவாரி

# மக்களும் புலிகளும் வேறின்றில்லை

# ஈழம் ஒன்றே இறுதி என்கின்றனர்

"விடுதலைப் புலிகளை கிழக்குமாகாணத்தில் இருந்து விரட்டிவிட்டோம். இராணுவம் கிழக்குக் கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்டு விட்டது என இலங்கை அரசு மீண்டும், மீண்டும் கூறிவரும் அதே சமயம் கிழக்கிலோ நிலை வேறாக இருக்கிறது. அங்கு புலிகள் இன்னமும் சைக்கிள்களில் சர்வசாதாரணமாக உலாவிவருகின்றனர்." என்று மட்டக்களப்புச் சென்று திரும்பிய பிரெஞ் ஏ. எப். பி. செய்தியாளர் கூறியுள்ளார்.

மட்டுநகரில் வயது குறைந்த போராளிகளை தாம் கண்டதாகக் கூறும்அவர் தாம் அயல் கிராமம் ஒன்றுக்குச் சென்று புலிகளைச் சந்திக்கவேண்டும் எனக் கிராமத்தவர்களைக் கேட்டபோது சில நிமிடங்களில் பதினைந்து புலிப் போராளிகள் ஏ. கே - 47 ரக ஆயுதங்களுடன் வந்து தம்மைச்சந்தித்தனர் எனக்குறிப்பிட்டார்.

மட்டக்களப்பின் கரையோரப் பிரதேசங்களில் இராணுவத்தினரைக் காணவே முடியவில்லை. புலிகள் நடமாட்டம் சுதந்திரமாகக் காணப்பட்டது, எனினும் மக்களிடையே வான் தாக்குதல் குறித்தே அச்சம் நிலவுகிறது.

மட்டு நகரில் மட்டுமே இராணுவத்தின் கட்டுப்பாடு நகர் தவிர்ந்த ஏனைய பகுதி

— 04 ஆம் பக்கம் பார்க்க

கிளிநொச்சிப்பகுதியில்

## காரிருள் வேளை விமான தாக்குதல், மக்கள் நிலைகுலைவு

(உருத்திரபுரம்)

கிளிநொச்சியில் இடைவிடாது இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதால்பலர் படுகாயமடைந்துள்ளனர்.

கணேசபுரம், கிளிநொச்சி நகர், பரவிப்பாஞ்சான், திருநகர், கனகபுரம், கரடிப்போக்கு. முதலானபகுதிகளை நோக்கி இராணுவத்தினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

இரணைமடுக் குளத்திலிருந்து

## இராணுவத் தடையையும் மீறி வேளாண்மைக்கு நீர்

(உருத்திரபுரம்)

இராணுவத்தினரின் தடையையும் மீறி இரணைமடுக் குளத்திலிருந்து சிறுபோக வேளாண்மைக்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டது,

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.மாணிக்கவாசகர், நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.நவரத்தினராசா ஆகியோர் எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கைகளைத் தொடர்ந்து தண்ணீர் இல்லாமல் கைவிடப்பட்டிருந்த சிறுபோக வேளாண்மை மாற்று நடவடிக்கை மூலம் இரணை

—04ஆம் பக்கம் பார்க்க

ஆனையிறவு முகாமில் தொல்லைபல

## பெண் புலிகள் மீதும் இராணுவம் மிகக் கிலேசம்

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியால் யாழ். நோக்கி வரும் பயணிகளை சோதனையிட்டு இராணுவம் விசாரணை செய்கையில் பல்வேறு கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

"உங்கள் அக்கா, தங்கச்சி யாரும் பெண் புலிகளாக உள்ளனரா? என்றும் இவர்கள் துருவித் துருவிக் கேட்கின்றனராம்.

— 04ஆம் பக்கம் பார்க்க

செங்கை ஆழியானின் 'களம் பல கண்ட யாழ். கோட்டை' பகுதி 1 - பக்கம் 2 [illegible] பக்கம் 3



# களம் பல கண்ட யாழ் கோட்டை 1

★ செங்கை ஆழியான்

**28, ஒக்டோபர் 1591**

யாழ்ப்பாணக்கடல்ஏரிஊடாக போர்த்துக்கேயரின்படைக் கப்பல்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரான நல்லூரைக் குறியாகக்கொண்டு பிரவேசித்தன. யாழ்ப்பாணத்தின் மீது போர்த்துக்கேயர் எடுக்கும் மூன்றாவது படையெடுப்பு இதுவாகும். யாழ்ப்பாண இராச்சியத்தின் அக்கால மன்னனாக எதிர்மன்ன சிங்க குமாரன் என்பான் விளங்கினான். போர்த்துக்கேயப்படையில் 1400 பறங்கிகளும், 3000 லாஸ்கொறின் எனப்படும் சிங்களச்சுதேசிகளும், 43 மரக்கலங்களும், 250 வள்ளங்களும் இருந்தன. பீரங்கிகளும் துவக்குகளும் அவர்களின் போர்க்கலங்களாக விளங்கின. இப்பெரும் படைக்கு அந்திரே பூர்த்தாடு டி மென்டொன்சா என்ற போர்த்துக்கேயன் தளபதியாக இருந்தான்.

யாழ்ப்பாணப்பட்டினத்தின் தென்கரையோரம் முழுவதும் ஒரேகட்டைக்காட்டு மரங்களினாலும், சதுப்புநிலத் தாவரங்களினாலும் மூடப்பட்டிருந்தது, அக்கரையோரக் காட்டிற்கு அப்பால் நாகரிகமான நல்லூர் நகரம் இருப்பதனை அவர்கள் அறிவார்கள். அக்காட்டு மரங்களுக்கிடையில் பண்ணைக்கரையில் முருகைக்கற்களினால் கட்டப்பட்டு பீலி ஓடுகளினால் வேயப்பட்ட இரு கட்டிடங்கள் இருப்பதை மென்டொன்சா கண்டான்.

— அவை முஸ்லிம் வர்த்தகர்களின் வர்த்தக சாலைகள்.

ஆம். இன்றைய யாழ்ப்பாணக்கோட்டை கம்பீரமாக எழுந்து நிற்கும் இடத்தில் முதலில் முஸ்லிம் வர்த்தகர்களின் இரு வர்த்தக சாலைகள் இருந்தன. நாவாந்துறையிலிருந்து அரியாலைவரையிலான கடற்கரையோரமும், உள்வாங்கி நாவலர் வீதி வரையிலான பரப்பும் அக்கால கட்டத்தில் கட்டைக் காட்டு மரங்கள் நிறைந்த பிரதேசமாக விளங்கின.

மனித சஞ்சாரமற்ற இப்பரப்பில் கொழும்புத்துறை, அலுப்பாந்தி பகுதிகள் போக்குவரத்துக்குரிய துறைகளாக விளங்கியதால் குடியிருப்புக்களைக் கொண்டிருந்தன. பண்ணையில், காட்டுப்பரப்பில், கரையோரமாக முஸ்லிம் வர்த்தகர்களின் வர்த்தகசாலைகள் அமைந்திருந்தன. யாழ்ப்பாண மன்னன் அவர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தான். இத்தகைய முஸ்லிம் வர்த்தகசாலைகள் யாழ்ப்பாணப்பண்ணையில் மாத்திரமன்றி நீர்கொழும்பு, கொழும்பு காலி முதலான கரையோரப்பகுதிகளிலும் காணப்பட்டன

> நல்லூரில் இடிக்கப்பட்ட கற்குவைகளைப் பயன்படுத்தி பண்ணையில் ஒரு கோட்டையைக் கட்டி முடிக்க பிலிப் தே ஒலிவேறா விரும்பினான். அதற்கான இடம் முஸ்லிம்கள் வர்த்தகசாலை அமைந்திருந்த இடமாகத் தெரிந்தெடுக்கப்பட்டது. அந்திரே பூர்த்தாடு டி மெண்டொன்சாவினால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு கொள்ளையிடப்பட்ட முஸ்லிம் வர்த்தகர்களின் பண்டகசாலைகள் இருந்த இடத்தில் யாழ்ப்பாணத்தின் கோட்டையைக் கட்டத்திட்டமிடப்பட்டது.

பண்ணையில் விளங்கிய அவ்விரு சிறு முருகைக் கற்கட்டிடங்கள் போர்த்துக்கேயத் தளபதியின் மனதில் பதிந்து சிந்திக்க வைத்தன. அவன் நல்லூரை வெற்றி கொண்டு, மன்னனோடு சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டு திரும்பும்போது, தமக்கு எதிராகச் செயற்படுவார்களெனக் கருதிய எண்ணூறு வடக்கரையும் சில சோனகரையும் சிரச்சேதம் செய்துள்ளான். அத்துடன் பண்ணைக்கரையில் இருந்த முஸ்லிம்களின் வர்த்தகசாலையை அழித்து, அதில் இருந்த 10 ஆயிரம் கண்டி நெல்லையும் 400 கண்டி அரிசியையும் கொள்ளையடித்துச் சென்றான். (கண்டி என்பது ஒரு அளவு, 500 இறாத்தல்களைக் கொண்டது.)

**1621, பெப்ரவரி மாதம், 2-ம் திகதி**

பிலிப் தே ஒலிவேறா என்ற போர்த்துக்கேய தளபதி யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி நல்லூரில் தன்னுறைவிடத்தை அமைத்துக் கொண்டான். யாழ்ப்பாண மன்னனுடன் ஏற்பட்ட மனக்கசப்பால், போர்த்துக்கேயர் மீண்டும் படையெடுத்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசிச் சுதந்திர மன்னன் சங்கிலி செகராசசேகரன், யாழ்ப்பாணம் தன் சுதந்திரத்தை இழந்த இறுதிப் போரில் மரணமடைய நேரிட்டது.

நல்லூரில் பெரிய கோயிலாக, நல்லூர்க்கந்தசுவாமி கோயில் விளங்கியது. இன்று முத்திரைச்சந்தியில் கிறிஸ்தவ தேவாலயம் இருக்கும் இடத்தில் இக்கோயில் வானளாவிய ராஜகோபுரங்களுடனும் கோட்டை போன்ற மதிற்சுவர்களுடனும் தென்னிந்தியக் கோயில்களின் பாரிய வடிவில் அமைந்திருந்தது.

பிலிப் தே ஒலிவேறா அப்பெரிய கோயிலை இடித்துத் தரைமட்டமாக்குமாறு கட்டளையிட்டான். நல்லூர்க் கந்தனாலயத்தை அடி அத்திவாரத்தோடு கிளறிக் குவிக்குமாறு கட்டளையிட்டான். முருகைக்கற்களினாலும் சுண்ணாம்புக் கற்களினாலும் சுதைகொண்டு கட்டப்பட்டிருந்த அக்கோயிலின் கற்கள் மலைபோலக் குவிந்தன. யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்த சைவ ஆலயங்கள் பலவும் இவ்வாறு இடித்துத் தள்ளப்பட்டது.

(பகுதி 2 பக்கம் மூன்றில்)

# உணவு உற்பத்தியில் ஈடுபட சகலருக்கும் வேண்டுகோள்

இன்றைய போராட்ட சூழ்நிலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வடகிழக்கு பகுதிக்கு கடல்மார்க்கமாக கொண்டு வருதலையும் தரைமார்க்கமாகக் கொண்டு வருதலையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் சிறிலங்கா அரசு தடுத்து வருவது யாவரும் அறிந்ததே. இந்தப்போர் நீண்ட காலயுத்தமாக மாறி வருகின்ற நிலையில் உணவுத் தேவைகளை எமது பிரதேசத்திலேயே உற்பத்தி செய்வது மிகவும் அவசியமாகிறது. இவ்வாறு ரூட் விடுத்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக குறுகிய காலப் பயிர்களையும்அவை உற்பத்தி செய்யக் கூடியபகுதிகளையும் இனங்கண்டு, செயற்படுத்தும் சமூகத்தின் எல்லாத்தரப்புமக்களையும் இந்த முக்கிய பணியில் இணைத்துக் கொள்வதும் அவசியமாகின்றது,

இந்த நோக்கத்தின் அடிப்படையில் கீழ்க்காணும் செயல் திட்டம் உடனடியாக அமுல் செய்யப்பட வேண்டுமெனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இத்திட்டத்தை பின்வரும் குழுக்கள் நடைமுறைப்படுத்தும். கிராம அபிவிருத்தியை/ ஜனசமூக நிலையப் பிரதிநிதி ஒருவரும் விவசாயத்தில் அக்கறையுள்ளவர்களும் தொழில்நுட்ப அனுபவமுள்ளவர்களுமாக ஏழுபேர் கொண்ட குழுக்கள் கிராமிய மட்டத்தில் அமைக்கப்படும். இந்த கிராமிய உற்பத்திக் குழுக்கள் அந்தந்த கிராமத்தில் உள்ள வளங்கின் அடிப்படையில் அவற்றை உணவு உற்பத்திக்கும் அத்தியாவசிய தேவைகளின் உற்பத்திக்கும் மற்றும் உட்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட வையாகவும் இக்குழுக்கள் அமையும்.

அத்துடன் கமநலசேவை நிலைய மட்டத்தில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்படும்.

தற்பொழுது நடைமுறையில் உள்ள குழுக்கள் சீரமைத்து கீழ்வருவோரையும் ஒன்றிணைத்து மேற்படி குழுக்கள் அமைக்கப்படும்.

பெரும்பாக உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர், விவசாயக் குழுத்தலைவர், கிராமிய விவசாய மற்றும் உற்பத்திக்குழுக்களின் பிரதிநிதி, பொறியியல் தொழில் நுட்பத் துறையில் அனுபவம் பெற்றவர் இருவர், மீன்பிடித்துறையில் தகைமை பெற்றவர் ஒருவர்.

உணவு உற்பத்தித் திட்டத்தை அமுலாக்குவதும் நிறைவேற்றுவதும் கிராமிய உற்பத்தியில் குழுக்களின் முக்கிய பணியாகும். திட்டத்தை செயல்படுத்துவதில் ஏற்படும் விவசாய தொழில்நுட்ப பிரச்சனைகளையும் அவைசம்பந்தமான அறிவுரைகளையும் கமநல சேவை நிலைய மட்டக் குழுக்கள் வழங்கும்.

இனங்காணப்பட்ட உற்பத்திக்கு உடனடியாகக் கவனம் செலுத்தப்படவேண்டிய பயிர்கள் குரக்கன், சாமை, தினை வற்றாளை மரவள்ளி பாசிப் பயறு, கௌப்பி.

மேற்குறிப்பிட்ட பயிர்கள் யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்யக்கூடிய பொருத்தமான விவசாய போதனாசிரியர் பிரதேசங்கள்.

அ. குரக்கன் - கீரிமலை, புத்தூர். சாவகச்சேரி, நல்லூர், தொல்புரம், உடுவில் புலோலி, கைதடி, உரும்பிராய்,

ஆ. சாமை - கீரிமலை, உடுவில், புத்தூர், உரும்பிராய்

இ. தினை - கீரிமலை, உடுவில், புத்தூர், புலோலி, உரும்பிராய்.

ஈ. வற்றாளை - சாவகச்சேரி, கைதடி

உ. மரவள்ளி - சாவகச்சேரி, நல்லூர், கீரிமலை, உடுவில், புத்தூர், கைதடி உரும்பிராய்

ஊ. பாசிப்பயறு - சாவகச்சேரி, நல்லூர். தொல்புரம், கீரிமலை, உடுவில், புத்தூர், புலோலி, கைதடி, உரும்பிராய்.

எ. கௌப்பி - சாவகச்சேரி, நல்லூர், உரும்பிராய், கைதடி, புலோலி.

நீர்ப்பாசனத்திற்கு தேவையான எரிபொருள் மின்சாரம் ஆகியவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கிடைக்காமல் போகலாம் அல்லது பாரிய விலை அதிகரிப்புக்கு உள்ளாகலாம் என்பதை கவனத்திற்கெடுத்து பாரம்பரிய நீரிறைக்கும் முறைகளை மீண்டும் கையாள நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் அவசியம். குறிப்பாக துலாமூலம் நீர் இறைக்கும் முறையை கூட்டுறவு அடிப்படையில் பின்பற்றல்;

விவசாயம் செய்யக்கூடிய எல்லா விளை நிலங்களையும் பயிர்ச் செய்கைக்கு உள்படுத்தல் அத்தியாவசியமானது.

விளைநிலங்களாக இருந்தும் தற்பொழுது விவசாயம் செய்யப்படாமல் உள்ள வெற்று நிலங்களை கிராமிய உற்பத்திக் குழுக்கள் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தி உணவு உற்பத்தியை பெருக்க உதவும்.

ஒவ்வொரு வீட்டிலும் கூடுமானவரை மரக்கறி பழவகைகள் மரவள்ளி ஆகியவற்றை உற்பத்தி செய்ய மக்கள் தாமாகவே முன்வர வேண்டும். அதற்கான ஆலோசனைகளை மேற்குறிப்பிட்ட குழுக்கள் வழங்கும்,

ஏனைய உற்பத்திகள் சம்பந்தமான விபரங்கள் தொடர்ந்து வெளியிடப்படும். (கி)

## அச்சுவேலியில் நேற்று...

அச்சுவேலி, வயாவிளான், தொண்டமானாறு ஆகிய பகுதிகளில் நேற்று ஹெலிகப்டரிலிருந்து கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் இப்பகுதியில் வழமை நிலை நேற்று பெரிதும் பாதிக்கப்பட்டது. (64 கி)

## இன்று தேர்த்திருவிழா

(சித்தன்கேணி)

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமியார் கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த ஜூன் மாதம் 30-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

இன்றுதிங்கட்கிழமைதேர்த் திருவிழாவும் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் புதன்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (12 கி)

## மாவிட்டபுரம் கொடியேறியது

(சங்கானை)

பதட்டம், குண்டுச்சத்தங்களின் மத்தியிலும் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 27-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ஆரம்ப உற்சவ தினங்களில் உள்வீதியில் மட்டும் சுவாமி சுற்றுதல் நடைபெற்றுவந்தது.

உற்சவங்கள் தொடர்ந்து நடைபெற்று 18-ம் திகதி வேட்டைத் திருவிழாவும், 19-ம் திகதியன்று சப்பறத் திருவிழாவும் 20-ம் திகதியன்று பஞ்சரத உற்சவமும், 21-ம் திகதியன்று ஆடி அமாவாசைத் தினத்தன்று தீர்த்த உற்சவமும், 22-ம் திகதியன்று மாம்பழத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (13. கி)

## மானிப்பாயில் தெருக்கூத்து

தமிழீழ மீட்பு நிதி பற்றிய நாட்டுக்கூத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினால் மானிப்பாய் பகுதியில் தெருக்களில் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

பொது மக்கள் குழுமி நிற்கும்இடங்களில் இந்த தெருக்கூத்து நடாத்தப்படுகிறது. (68.கி)

# மீண்டும் எரிபொருள் விற்பனை தெருவோரங்களில் ஆரம்பம்

குடா நாட்டில் தெருவோரங்களில் எரிபொருள் விற்பனை நேற்று முன்தினம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் தெருவோர விற்பனை நிலையங்களில் போதியளவு எரிபொருட்களைப் பெறக் கூடியதாக உள்ளது.

இதே வேளை மன்னாரில் ஒரு லீற்றர் பெற்றோல் 55 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டிலும் எரிபொருள் விலைகளில் வீழ்ச்சி ஏற்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (கி)

## யாழ். செயலக ஊழியர்

# சகலரையும் கடமைக்கு வருமாறு வலியுறுத்து

யாழ். செயலகத்தில் கடமைபுரியும் சகல ஊழியர்களையும் சமுகமளிக்கும்படி அறிவிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

தற்போது தூர இடங்களில் உள்ள செயலக ஊழியர்கள் தத்தமது பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடமைபுரிந்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரையும் திங்கள் காலை பத்துமணிக்கு செயலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி யாழ் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்

இக்கலந்துரையாடலிலே ஊழியர்கள் அனைவரையும் கடமைக்கு சமுகமளிக்கும்படி கேட்கப்படவுள்ளனர். அத்துடன் ஊழியர்களின் பிரச்சனைகள் குறித்தும் இதில் ஆராயப்படவுள்ளது.

அகதிகளின் நிவாரண வேலைகள், மற்றும் உணவுப் பொருள் விநியோகம்போன்ற அத்தியாவசிய நடவடிக்கைகளுக்காகவே சகல ஊழியர்களையும் கடமைக்கு அழைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (03- ஸ்ரீ

# மும்முனை தாக்குதலுக்கு படையினர் முஸ்தீபு

யாழ். குடாநாட்டில் மும்முனைத் தாக்குதலொன்றை தொடங்குவதற்கு தயாராக இருக்குமாறு படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பில் இராணுவ வட்டாரங்களில் இருந்து இத்தகவல் பெறப்பட்டதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏககாலத்தில் தரை, கடல், ஆகாய மார்க்கமாக இத் தாக்குதல் மேற்கொள்ளப்படும்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து யாழ். குடாநாட்டை மீட்கும் இறுதித் தாக்குதலாக இது இருக்கும் என சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாகவும் இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதற்கான ஆயத்த நிலையில் இருக்குமாறு முப்படைத் தலைமையகத்திலிருந்து வடக்கிலுள்ள சகல படை முகாம்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை புதிதாக வாங்கப்பட்ட இத்தாலிய குண்டுவீச்சு விமானங்களும், பெல்ஹெலிகப்டர்களும் தென்பகுதியின் கடற்பகுதியில் யுத்த ஒத்திகையில் ஈடுபட்டதாக மற்றொரு தகவல் தெரிவிக்கப்படுகிறது. (கி)

## வல்வையில் பீரங்கி

## தாக்குதலால் வீடுகள் பல தகர்ப்பு என அறிவிப்பு

வல்வெட்டித்துறை குடியிருப்புப் பகுதிகள் கடற்படை பீரங்கித் தாக்குதலால் தாக்கப்படுவதாக விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

இதனால் இப்பகுதியில் பல வீடுகள் தகர்க்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

இத்தகவலை நேற்று இந்திய வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ)

## கொக்குவிலில் 30 மூடை பதுக்கல் சீனி மீட்பு

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் 30 மூடை சீனியை பதுக்கி வைத்திருந்தமையினால் அவரது கடைமூடப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி தெரிய வருவதாவது மேற்படி வர்த்தகரிடம் பொதுமக்கள் சீனி வாங்க சென்ற சமயம் தன்னிடம் சீனி இருப்பில் இல்லை என்று சொல்லி வழங்க மறுத்து விட்டாராம்.

இத்தகவலை அறிந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் கடையைச் சோதனையிட்ட போது கடையில் 19 மூடை சீனியும் அவரது வீட்டில் 11 மூடை சீனியும் இருக்கக் கண்டுபிடித்ததையடுத்தே அவரது கடை சீல் வைக்கப்பட்டுள்ளது என அறியவந்துள்ளது. (66ஸ்ரீ)

## கலைப்பு மசோதாவை ஈ.பி.ஆர்.எல்.எப். கண்டனம்

இலங்கை அரசாங்கத்தின் வடக்கு, கிழக்கு மாகாண சபைக் கலைப்புச் சட்ட மூலத்தை ஈ. பி. ஆர். எல். எப், குறை கூறியுள்ளது. மாகாண சபைக்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்றும் அது கூறியுள்ளது.

புதுடில்லியில் இவ்வியக்கத்தின் தலைமைப்பீடம் இது தொடர்பான கண்டன அறிக்கை ஒன்றினை விடுத்ததாக நேற்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ)

## பொதுமக்கள் மீதான அடக்குமுறை பல்கலைக்கழகம் கண்டனம்

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மீது தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் கண்மூடித்தனமான தாக்குதலையும் பொருளாதார தடையையும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டித்துள்ளது. இதுதொடர்பாக ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் அப்பாவி பொதுமக்களின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிப்பதும் இனி என்ன நடக்குமோ என்ற அவலத்திற்கும், சலிப்பிற்கும் அவர்களை ஆளாக்குவதுமான தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையை ஆழ்ந்த கவலையோடும்- அதிகரித்த அச்சத்துடனும் கண்ணாக்குகிறோம். தமிழ்ப் பகுதிகளில் போர் விமானங்களாலும், ஹெலிகொப்டர்களாலும் நடாத்தப்படும் குண்டுவீச்சுக்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதிகரிக்கும் பதற்றமும், முறையும் நிலைமையை சீர்குலைப்பதோடு மக்களின் மனதில் தம் ஏற்றிய பீதியை வலுவடையச் செய்கின்றன. அப்பாவிப் பொதுமக்கள் மீது திட்டமிடப்பட்ட முறையில் திணிக்கப்பட்டிருக்கும் இத்தகைய இரக்கமற்ற செயல்கள் இனஒழிப்பு முறையாக அமைவதோடு, இத்தகைய செயல்களை எவ்வகையிலும், யாராலும் நியாயப்படுத்தமுடியாது.

பலாத்காரம் கட்டவிழ்த்துவிடப்பட்ட இதேவேளையில் தமிழ் மக்கள்மீது திணிக்கப்பட்டிருக்கும் பொருளாதார தடையானது அப்பாவிப் பொதுமக்களின் பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டிய அவலநிலையை உருவாக்கியுள்ளது. இத்தகைய சூழ்நிலை பொதுமக்களின் அவஸ்தையை அதிகரிக்குமேயன்றி பிரச்சனைக்கு தீர்வாக அமையாது என்ற உண்மையை அரசாங்கம் உணர்ந்து கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொள்ளாது எல்லாப் பிரச்சனைகளுக்கும் நியாயபூர்வமான முறையில்தீர்வைக் காண்பதே சிறந்தது. இந்நிலையில் சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவது தமிழ்பேசும் மக்கள்மீது கரிசனையுள்ள எல்லோரது தலையாய கடமையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இடமாற்றம்

யாழ். கடற்கரை வீதியில் இயங்கி வந்த ''குருநகர் அரசினர் மத்திய மருந்தகம்'' கொழும்புத்துறையில் உள்ள பாடசாலை வைத்திய அதிகாரியின் அலுவலகத்துக்குத் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (47.கி)

## திருமலையில்

திருகோணமலையில் உள்ள மட்டுபுகலி, நல்லூர் ஆகிய இடங்களில் இராணுவத்தினரும் ஊர்காவற்படையினரும் சேர்ந்து 10 இளம்பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளனர்.

அத்துடன் அவர்கள் 20 ஆண்களின் கழுத்துகளை வெட்டி கொலை செய்துள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. (03)

## முல்லைத்தீவில் ஷெல் தாக்குதல்

நேற்று முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து மக்கள் வாழும் பகுதியை நோக்கி இடைவிடாத ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த அகோர ஷெல்தாக்குதல்களினால் பல கட்டடங்கள் சேதமடைந்ததுடன் பொதுமக்கள் சிலர் காயமடைந்தார்கள் இரண்டு கடைகள் தீப்பற்றி எரிந்தன. (3)

## தீவுப்பகுதியின் உணவு நிலை

தீவுப்பகுதிக்கான உணவு விநியோகம் புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பிட்டளவு உணவுப் பொருட்கள் கட்டுப்பாட்டுடன் வழங்கப்படுவதால் தீவுப்பகுதிகளில் அதிகளவு உணவுத் தட்டுப்பாடு ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது. 03

## போதி பூஜை தொடர்கிறது

வடக்கு, கிழக்கில் தொடர்ந்து நடைபெற்றுவரும் யுத்தத்தில் காயமடையும், உயிர் நீங்கும் படைவீரர்களுக்கான போதி பூஜைகளும் சமயவழிபாடுகளும் நாடெங்கும் தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் கோரிக்கையின்பேரில் இவை நடைபெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## நிர்வாகக் குழுக் கூட்டம்

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிர்வாக அங்கத்தவர்களுக்கான கூட்டம் நாளை காலை 9 மணிக்கு நடைபெறும் என யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றிய செயலாளர் அறிவித்துள்ளார்.

## களம் பல கண்ட யாழ். கோட்டை (2)



யாழ். கோட்டை கட்டப்படும் காட்சி

நல்லூரில் இடிக்கப்பட்ட கற்குவைகளைப் பயன்படுத்தி, பண்ணையில் ஒரு கோட்டையைக் கட்டி முடிக்க பிலிப் தே ஒலிவேறா விரும்பினான். அதற்கான இடம் முஸ்லிம்கள் வர்த்தகசாலை அமைத்திருந்த இடமாகத் தெரிந்தெடுக்கப்பட்டது. அந்திரே பூர்த்தாடு டி மெண்டொன்சாவினால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு கொள்ளையிடப்பட்ட முஸ்லிம் வர்த்தகர்களின் பண்டகசாலைகள் இருந்த இடத்தில் யாழ்ப்பாணத்தின் கோட்டையைக் கட்டத் திட்டமிடப்பட்டது. அவ்விடத்தின் அமைவிடம் பலமான கோட்டையொன்றினை அமைப்பதற்கு மிக வாய்ப்பானதாகவிருந்தது.

போக்குவரத்துக்கு வாய்ப்பான கடற்கரையோரம், அருகில் இருந்த கொழும்புத்துறை, அலுப்பாந்தித்துறை, அகழிகளுக்கு நீர் தரக்கூடிய கடல், பகைவர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு வழங்கக்கூடிய இட அமைப்பு என்பன ஒலிவேறாவுக்குத் திருப்தி தந்தன.

கோட்டை கட்டுவதற்கான இடந் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அதனைக் கட்டுவதற்கான கற்கள் அவ்விடத்தில் சேகரிக்கப்பட்டன. முதல் கட்டமாக நல்லூர் பெரிய கோயில் இடித்ததால் குவிந்து கிடக்கும் கற்குகைகள் அவ்விடத்தில் கொண்டுவரப்பட்டன. முருகைக்கற்கள், சுண்ணாம்புக்கற்கள், செங்கட்டிகள் என்பன பாரிய கூடார வண்டிகளில் முதலில் ஏற்றப்பட்டு பண்ணைக்கரையில் சேர்க்கப்பட்டன.

அவை விரைவாக இல்லையென்பதை உணர்ந்த ஒலிவேறா, யாழ்ப்பாண மக்களையும் தனது படைவீரர்களையும் நல்லூரிலிருந்து பண்ணைவரை மனிதச் சங்கிலியாக வரிசையாக நிற்க வைத்து கற்களை வேகமாகக் கரம்மாற்றி அனுப்பிப் பண்ணைக் கரையில் குவிப்பித்தான். அதே முறையில் யாழ்ப்பாணத்தில் இடித்துத் தள்ளப்பட்ட சைவ ஆலயங்களின் கற்களையும் பண்ணைக்கரையில் சேர்ப்பித்தான். குவிக்கப்பட்ட கற்கள் கோட்டை கட்டுவதற்குப் போதுமானவையாக இருக்கவில்லை. எனவே, எஞ்சிய கோயில்களையும் அவன் இடித்துத் தள்ளி விடுவான் என்ற பயத்தில் கோட்டை கட்டுவதற்குத் தேவையான முருகைக் கற்களை யாழ்ப்பாணத்திற்கு அருகில் இருக்கும் தீவுகளிலிருந்து தோணிகள் மூலம் சேகரித்துத் தருவதாக யாழ்ப்பாணத்து முதலிமார்களும் வன்னிமைகளும் வலிந்து ஒத்துக்கொண்டனர்.

அதற்குரிய பணத்தினைத் தருவதாக ஒலிவேறா ஒப்புக்கொண்டான். கோட்டை கட்டுவதற்குரிய சுதை தயாரிப்பதற்கான சுண்ணாம்புக் காளவாய்கள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டன. அவை சுண்ணாம்புக் கற்களைச் சுட்டுப் பதமாக்கி பண்ணைக் கரையில் சேர்த்தன. அவற்றோடு கலப்பதற்காகக் கோவாவிலிருந்து சர்க்கரை பெருமளவில் மூடைகளாகவும், கருப்பஞ்சாறும், சிறியளவில் களிமண்ணும் பண்ணைக் கரையில் குவக்கப்பட்டன. சுட்ட சுண்ணாம்பும் சர்க்கரையும் சிறியளவில் களிமண்ணும் சேரும் போது முருகைக்கற்களை பலமாகப் பற்றும் சுதை உண்டாகிறது. இப்போது அனைத்தும் தயார்.

யாழ்ப்பாணத்திலிருந்த சைவாலயங்கள் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட முருகைக் கற்களும் சுண்ணாம்புக் கற்களும் நீள் சதுரக்கனங்களாக சிற்பிகளால் பொழியப்பட்டவை. அவ்வாறு பொழியப்பட்ட கற்கள் போர்த்துக்கேயருக்குத் தமது கோட்டையை இலகுவாக அமைக்க உதவின.

யாழ்ப்பாணக்கோட்டை கட்டுவதில் அநேகம்பேர் வேலை செய்தனர். பண்ணைக்கரையில் குவிக்கப்பட்ட கற்களுடன் அயற்தீவுகளிலிருந்து முருகைக்கற்கள் தோணிகள் மூலம் கொண்டுவரப்பட்டன. ஒவ்வொரு தோணி முருகைக் கற்களுக்கும் 3 பணம் வழங்கப்பட்டது. அதனால் தோணிகளையுடைய பலரும் இதில் ஈடுபட்டனர்.

வேலணை (தண்ணீர்த்தீவு) புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு எழுவைதீவு முதலான தீவுகளைச் சேர்ந்தவர்கள் முருகைக்கற்களைச் சேகரித்துக் குவித்துத் தோணிகளுக்கு வழங்கினர். அதற்கு அரைப்பணம் பெற்றுக்கொண்டனர். அக்கற்களை ஏற்றிச்செல்லுந் தோணிகளுடன் காவலாகப்போகும் அதிகாரத்துக்கு மாதம் ஒன்றிக்கு 13 பணம் சம்பளமாக வழங்கப்பட்டது.

கோட்டை கட்டுவதில் போர்த்துக்கேய மேசன்மாருடன் உள்ளூர் மேசன்மார்களும் பங்குகொண்டனர். தலைமையான மேசன் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 1 பணமும், அவனுக்குக் கீழ் வேலைசெய்யும் மேசன்மார்களுக்கு நாளொன்றிற்கு அரைப்பணம் வீதமும் கூலி வழங்கப்பட்டது.

ஒரு தலைமை மேசனின் கீழ், நான்கு துணை மேசன்மார் வேலை பார்த்தனர். கோட்டைகட்டுவதில் சிற்றாள்களாக வேலை பார்த்த ஊழியக்காரர் ஒவ்வொருவருக்கும் சாப்பாட்டிற்கு வருடம் ஒன்றிற்கு 70 கண்டி சாமிஅரிசி வழங்கப்பட்டது. கோட்டைகட்டும் வேலையைப் பலர் மேற்பார்வை செய்தனர். அவர்களை ... பிள்ளைகள் என்றனர். ... மாக

### தென்மராட்சிப் பொறுப்பாளர் தினேஸ் சூளுரை

# ஆனையிறவைக் கடந்து ராணுவம் வருவதா? நடக்காது

''போராட்ட வல்லமையுடையவர்களையும், விருப்பமுடையவர்களையும் கவலையை விடுத்து பெற்றோர்கள் போராட்டத்திற்கு அனுப்ப முன்வரவேண்டும். இன்றைய நிலையில் எல்லோரும் போராட்டத்தில் ஈடுபடும் நிலையேற்பட்டுள்ளது. இன்றும் பலர் போராட்டத்தில் எந்தவித பங்களிப்பும் செய்யாமல் தட்டிக் கழிப்பது வேதனைக்குரிய விடயமாகும்'

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு, தினேஸ் பளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போர்கால தடாகம் நிகழ்ச்சியில் கலந்துகொண்டுரையாற்றுகையில் கூறினார்.

தென்மராட்சிக் கலை கலாசாரப் பிரிவினால் பச்சிலைப்பள்ளி வட்டப் பொறுப்பாளர் திரு. வ, செல்வராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. தினேஸ் தொடர்ந்து பேசுகையில் ''எம்மை 'முழுமையாக அழித்த பின்னரே இலங்கை இராணுவம் ஆனையிறவு முகாமிலிருந்து இப்பகுதிக்குள் நுழையமுடியும். ஆகையால் அதைப்பற்றிய சிந்தனையை விடுத்து அப்பேர்ப்பட்ட இறுதி போராட்டத்தில் போராடிக்கொண்டிருக்கும்எம்முடன் இளைஞர்களும், யுவதிகளும் ஒருங்கிணைந்து போராட்டக் களத்தில் குதியுங்கள்.

தமிழீழ பிரதேசத்தையும், தமிழர்களையும் அழிக்க இனவாத சிங்கள அரசு இன்று தேசிய பாதுகாப்பு நிதி என்று கூறி சிங்கள மக்களிடையே மேலும் இனவாதத்தைக் கூட்டி கோடிக்கணக்கில் பணத்தையும் சேர்த்து, ஆயிரக்கணக்கில் இளைஞர்களையும் சேர்த்து வருகிறது.

ஆனால் எம் இளைஞர்கள் இன்னும் பாராமுகமாக பாடசாலையை விட்டுச் செல்லும் பிள்ளைகளுக்குப் பின்னால் ஒரு சைக்கிளில் இரண்டு பேர் வீதம் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்நிலைமாறி அனைத்து இளைஞர்களும் யுவதிகளும் உடனடியாக எமது போராட்டத்தில் குதித்து எம் தமிழீழ மண்ணைக்காப்பாற்றவாருங்கள்'' எனப் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்து பேசிய தென்மராட்கி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா பேசுகையில் இன்னும் எமது பகுதியில் உள்ளவர்கள் புடைவைக்கட்டிற்குப் போனால் 500 ரூபாவிற்கு பவுணும் 150 ரூபாவிற்கு சைக்கிளும் வாங்கலாம் எனவே பேசிக்கொண்டிருக்கிறார்கள் எமது இன்றைய போராட்டம் பற்றிய நினைப்பு வந்ததாகத் தெரியவில்லை அதனால் தான் இன்று பல இளைஞர்கள் ஏனோ தானோ என்ற நிலையில் இருக்க நூற்றுக்கணக்கான யுவதிகள் எம்முடன் இணைந்து போராட முன்வருகிறார்கள்,

ஆகையால் தமிழ் இளைஞர்களே அரசியல் இழப்பிற்கும் மரணத்திற்கும் ஆளாகாமல் எம்மண்ணை எம் சகோதர சகோதரிகளைக் காப்பாற்ற இன்றே எம்முடன் சேர்ந்து போராட்டக் களத்தில்இறங்க வேண்டுமென்றார்.

தென்மராட்சி மகளிர் படைப் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி அமுதினி உட்பட பலர் உரையாற்றினார்கள். தென்மராட்சி கலைகலாசாரப் பொறுப்பாளர் திரு ஏ.வீ.உலகநாதன் நன்றியுரை நிகழ்த்தினார்.

இறுதியில் தென்மராட்சி கலைகலாசார பிரிவினரின் பளைக் குழுவினர் வழங்கிய விடுதலை வேள்வி நாட்டுக்கூத்தும், உரிமைக்குரல் நாடகமும் அரங்கேறியது. (ப5ஸ்ரீ)

காங்கேசன்துறையில்

## கடற்படைக் கப்பல்கள் மீது புலிகள் குண்டுத்தாக்குதல்

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள கடற்படைக் கப்பல்கள் மீது விடுதலைப்புலிகள் மோட்டார் குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வருவதாக கொழும்பில் பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் உள்ள ஏனைய சில முகாம்கள் மீதும் இம் மோட்டார் குண்டுத் தாக்குதல்கள் புலிகளால் மேற்கொள்ளப்படுவதாகவும் இவ்வட்டாரங்கள் கூறின.

கடந்த 24 மணித்தியாலங்களில் எவ்வித பாரிய தாக்குதல்கள் எதுவும் வட, கிழக்கில் நடைபெறவில்லை என்றும் இவ்வட்டாரங்கள் நேற்று மாலை தெரிவித்தன' (ஸ்ரீ)

### புலிகளுடன்...

உயிர்ச் சேதம், பொருட்சேதம் ஆகியவற்றை நிறுத்த முடியும்'' என்றும் சொன்னார் அவர்.

### உணவுப் பொட்டலம்

''வடக்கு, கிழக்கில் விமானமார்க்கமாக உணவுப் பொட்டலங்களை அரசு போடவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஆயினும் அது போதியதாக இல்லை'' என்றும் திரு. பிரேமதாஸ குறிப்பிட்டார்.

''அவ்வப்போது யுத்தநிறுத்தத்தை விடுதலைப் புலிகளே மீறினர்'' என்று குற்றம் சுமத்திய அவர், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்பாகத் தாம் இரு கோரிக்கைகளை முன்வைத்ததாகவும் சொன்னார்,

''புலிகளால் சமர்ப்பிக்கப்படும் எக் கோரிக்கையும் இலங்கை அரசியல் யாப்புக்குட்பட்டதாக இருக்க வேண்டும் தீர்வுக்கான முடிவு பற்றி ஏனைய கட்சிகளின் ஆலோசனையும் பெறப்படும் என்பதே அவை.

''எவ்வித ஆத்திர மூட்டலுமின்றி, பேச்சுவார்த்தை நடைபெற்ற வேளையிலேயே புலிகள் போர் முஸ்தீபுகளையும் மேற்கொண்டனர்.

### புலிகளை மிஞ்ச...

புலிகளை மிஞ்சும் விதத்தில் ஈ. பி. ஆர். எல். எவ், சுதந்திர ஈழப்பிரகடனத்தை செய்து தொடர்ந்து மாகாண முதலமைச்சர் நாட்டைவிட்டு வெளியேறி விட்டார்:

வடக்கு, கிழக்கில் மக்கள் சகல கட்சிகளும் பங்கேற்கக் கூடிய சுதந்திரமாக அச்சமின்றி வாக்களிக்கக் கூடிய தேர்தல் ஒன்று நடாத்தப்பட வேண்டும்.

இதனாலேயே புதிய தேர்தல் நடாத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது.

### புலிகளும் தேர்தலும்...

இத்தகைய ஓர்நிலையில் விடுதலைப்புலிகள் இத் தேர்தலில் பங்கேற்பாரா? என்பதை இந் நாட்டு மக்களும் ,உலக மக்களும் இதற்கான பதிலை எதிர் பார்த்திருக்கின்றனர். அல்லது அவர்கள் தற்போதைய நடவடிக்கையைத் தான் தொடரப் போகின்றனரா என்பது தெரியவில்லை.

மாகாண சபைக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறும் எண்ணம் அரசுக்கு இல்லை. மாகாண சபைக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. என்கின்றனர். ஒருசாரார். அதிகாரம் போதாது என்கின்றனர். ஒருசாரார் மாகாண சபை முறையையே முற்றாக ஒழிக்கவேண்டும் என்கின்றனர் மற்றொருசாரார்

சகல கட்சிகளின் பொது இணக்கமும் இது விடயத்தில் தேவை. சர்வகட்சிமாநாடு இது விடயத்தில் உதவுவதாக அமைகிறது.

### புலிகளுடன்பேசியதில் நன்மை பல

புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளினால் பல நன்மைகள் கிடைத்தன. ஒருவருடம் யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது இதனால் சமாதானச் சூழ்நிலையில் மக்களால் வாழ முடிந்தது.

புலிகள் இயக்கம் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டது. ஓர் அரசியல் முன்னேற்றம் என்றே குறிப்பிட வேண்டும்.

புலிகளுடன் அரசு நல்லெண்ணத்துடனேயே பேச முற்பட்டது. மக்கள் விருப்புக்கேற்ப வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அவர்கள் வற்புறுத்தினர்.

ஈ. பி. ஆர். எல். எவ்.வுடன் அரசுபேசியது முட்டுக்கட்டை முயற்சி என புலிகள் எதிர்த்தனர். புலிகளுடன் பேசுவதை ஈ. பி. ஆர். எல். எவ். எதிர்த்தனர். மாகாண சபையை முதலமைச்சரின் சிபார்சின் பேரில் தான் கலைக்க முடியும். ஆனால் முதலமைச்சர் சுதந்திர ஈழம் பிரகடனத்தைச் செய்துவிட்டு விலகிச் சென்றுவிட்டார்.''

மேற்கண்டவாறு ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார், (ஸ்ரீ)

### மக்களும்...

களில் புலிகளின் சைக்கிள் பவனியை நேரிலேயே காணக் கூடியதாக உள்ளது என்றார் அவர்.

தாண்டிவேலி, ஒட்டமாவடி எனும் பகுதிகளில் புலிகள் நவீன ஆயுதங்களுடன் நடமாடுவதை நாம் கண்டதாகவும் அச்செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

''கடைசித் தமிழன் இருக்கும்வரை இலங்கையில் போர் நிகழும், இப்போது நடப்பது ஈழத்திற்கான போர், ஈழம் இல்லாது போர் ஓயாது என மட்டக்களப்பின் பிராந்திய தளபதி சுதர்ஸன் தம்மிடம் கூறியதாகவும், இப்போதைய கிழக்கு நிலையை அரசு பிழையான செய்திகள் மூலம் மூடி மறைக்கிறது. இரு தினங்களுக்கு முன்னர் கூட நடைபெற்ற மோதலில் 14 படையினர் கொல்லப்பட்டதை அரசு மறைத்து விட்டதாகவும் அந்த இருபத்தி நான்கு வயதான தளபதி குறிப்பிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப்போது உணவும் ஆயுதமும் எமது பிரச்சனையல்ல மக்கள் ஆதரவே போதும் என்பதே புலிகள் நிலைப்பாடு என்றும் புலிகளுக்கு மக்களின் நேரடி ஆதரவை ஒருதடவை ஏறாவூர் பகுதியில் தாம் நேரில் கண்டதாகவும், ''மக்களும் புலிகளதான் புலிகள் ஆயுதங்கள் வைத்திருப்பதே எமக்கிடையேயான வித்தியாசம்'' என ஒருவர் தம்மிடம் குறிப்பிட்ட தாகவும் ஏ.எப்.பி செய்தியாளர் தனது கிழக்கு செய்திகண்ணோட்டத்தில் குறிப்பிட்டுள்ளார். (து ஸ்ரீ)

### போர்க்காலக் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக அனைத்து மாணவர்களுக்குமான போர்க்கால விசேட பொதுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டு இன்றைய நிலைபற்றி கருத்துக்களை வழங்குவர் என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு அறிவித்துள்ளது. (கி)

### இன்று

(நாவற்குழி)

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட மாணவர்களுக்கு இன்றைய போர்கால நிலைபற்றிய கருத்தரங்கு இன்று பி.ப.2.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் தென்மராட்சியில் உள்ள மாணவர் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சி மாணவர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.(ப 5 ஸ்ரீ)

### ரகஸிய கொலை

கொழும்பில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கூறி இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கில்

## புலிகள் முயற்சி முறியடிக்க அரசு பாரிய நடவடிக்கை

கிழக்கு மாகாணத்தில் தம்பலகாமம், கோயிலடி, ஆலங்கேணி, மூதூர் முதலான பகுதிகளில் விடுதலைப்புலிகளால் வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடி, மற்றும் பொறிவெடிகளை அகற்ற இராணுவம் பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக நேற்றுப் பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்தன,

புலிகள் கொங்கிறீட்டிலான பதுங்கு குழிகளையும் அமைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

## முகமாலைப் பகுதியில் ஹெலி சரமாரிச்சூடு

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உள்ள முகமாலைப் பகுதியில் நேற்று அதிகாலை 1.00 மணியளவில் ஹெலி வட்டமிட்டு மக்கள் வாழும் பிரதேசத்தில் பலமுறை சுட்டது.

அதேவேளை பளையிலிருந்து சாவகச்சேரி நோக்கி வந்து கொண்டிருந்த வாகனம் ஒன்றின்மீதும் துப்பாக்கி வேட்டுக்களை அது தீர்த்தது தெய்வாதீனமாக வாகனத்திற்கோ பிரயாணிகளுக்கோ எந்தவித காயமும் ஏற்படவில்லை. (ப5-ஸ்ரீ)

## அக்கரையில் அடைக்கலம் நாட இவர்கள் நாட்டம்

திருமலை அகதிகள் பெருமளவில் யாழ், மாவட்டத்தை நாடி வந்து கொண்டிருக்கும் அதே வேளையில் இப் பகுதியைச் சேர்ந்த அநேகமானோர் தற்பொழுது இந்தியாவை நோக்கிப் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

கடந்த சில தினங்களாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கணிசமான அளவினர் இந்தியாவுக்கு பாதுகாப்புத் தேடிச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை மார்க்கத்தில் பிற மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்தை நாடி வருவோரையும், யாழ். மாவட்டத்திலிருந்து இந்தியாவுக்குப் பாதுகாப்புத் தேடிச் செல்வோரையும் ஏககாலத்தில் காணக் கூடியதாக உள்ளது. (கி

### பெண்...

இத்தகைய துன்புறுத்தலால் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து வரும் மக்கள் பலரும் குறிஞ்சாத்தீவு இயக்கச்சி ஊடாகவே தம் பயணத்தை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

### இராணுவத்...

மடுக் குளத்திலிருந்து தண்ணீர் வழங்கப்பட்டது.

இரணைமடுக் குளத்தின் உபகுளமான கிளிநொச்சிக் குளத்தை அண்மிய ஸ்ரீலங்கா இராணுவ முகாம் இருப்பதாலே மேற்டடி தண்ணீரை வயல்களுக்குக் கொண்டு செல்வதில் இராணுவம் தடையாக இருந்தது. என்பது குறிபிடத்தக்கது. (ப 6 ஸ்ரீ)

### இடமாற்றம்

விமானத்தாக்குதல் காரணமாக முதலாம் குறுக்கு [illegible]யில் அமைந்துள்ள மா[illegible] சிகிச்சை நிலையம் கோ[illegible] பாய் வி சி.காரியாலயத்தி[illegible] முன்பாக அமைந்துள்ள தி[illegible] J. லூதர் வீட்டில் ந[illegible] பெறுகின்றது.

### காரிருள்..

வழமைக்கு மாறாக இ[illegible] வேளைகளில் விமானத்தா[illegible] தல்களும் மேற்கொள்ள[illegible] கிறது. இதனால் மேற்[illegible] பகுதிகளில்பதற்றமாகவு[illegible]

...திருவனத்தினரால் யாழ். கல்வியங்காடு ... வெளியிடப்பெற்றது.